நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

22

## 4.5. எம் ஆலயத் திருவிழாவின் ஆன்மீகம்



கொடிமரம் அல்லது கொடி ஏற்றுதல் பங்கு ஆலய திருவிழா ஆரம்பமாகிறது என்பதன் அடையாளம். கொடி மரம் ஏற்றும் போது பங்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைகின்றோம்.

எமது ஆலயங்களில் நாங்கள் பல விழாக்களைக் கொண்டாடுகிறோம். அவற்றில் மிகவும் சிறப்பாகவும் விசேடமானதாகவும், ஆடம்பரமாகவும் கொண்டாடப்படுவது ஆலயத் திருவிழாவாகும். பங்குப் பாதுகாவலரான புனிதரின் விழா பங்கு மக்களுக்கு ஒரு விசேட நிகழ்வாகும்.

ஆலயத் திருவிழா எவ்வாறு கொண்டாடப்படுகிறது என கலந்துரையாடுங்கள்.

- திருவிழாவிற்கு ஆயத்தமாகும் முதல் நாளில் கொடிமரம் ஏற்றப்படுகிறது.
- கொடிமரம் வானளாவ உயர்த்தப்படுவது போல், இவ்விசேட காலத்தில் எமது உள்ளங்களும், சிந்தனை செயல்களும் இறைவன் பால் எழுப்பப்படவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

- பங்கிலுள்ள கத்தோலிக்க குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, ஒற்றுமையின் அடையாளமாக அர்த்தமுள்ள முறையில் பக்தி மரியாதையுடன் இதில் பங்கு கொள்ளுகிறோம்.

- இது ஒரு திருவழிபாட்டுச் செயல் அல்ல. ஆயினும் இதன்வழியாக பங்குப் பாதுகாவலரின் திருவிழாவை முன்னிட்டு இடம்பெறப்போகும் அனைத்து திருவழிபாட்டுச் செயல்களுக்கும் எமக்கு அழைப்பு விடப்படுகிறது.

- பங்குப் பாதுகாவலரின் திருவிழா பங்கு மக்கள் அனைவருக்கும் ஓர் புனிதமான காலமாகும். இக்காலத்தில் தியாகச் செயல்களில் ஈடுபடுதல், தானதர்மம் கொடுத்தல் என்பனவும் ஆன்மீக வாழ்வை வளம்படுத்த உதவுகிறது.

உண்மையில் கொடிமரம் பற்றிய விளக்கம் என்னவென்றால், முன்னைய காலங்களில் மறைபரப்பு நாடுகளில் பங்கு மக்களைச் சந்திக்கக் குருவானவர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு பங்கிற்கு வருவது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாகும். குருவானவரின் வரவை அடையாளப்படுத்த உயர்ந்த ஒரு மரத்தில் கொடி உயர்த்தப்படுவது அக்கால வழக்கமாக இருந்து வந்துள்ளது. இவ்வாறு பங்கிற்கு வந்த குருவானவர் பங்கில் ஓரிரு வாரங்கள் தங்கி இறை மக்களின் ஆன்ம தேவைகளைக் கவனித்து அருட்சாதனங்களை வழங்கி, மக்களின் ஆன்ம வாழ்வுக்கு உரமூட்டுவார். அந்நாட்களில், பங்கின் ஆலயத்தை அர்ப்பணித்துள்ள புனிதரின் அல்லது புனிதையின் திருவிழாவை நடாத்தி வைப்பார். எனவே இக்காலம் பங்கு மக்களுக்குத் திருவிழாக் காலமாகும்.

இங்கு பங்குகளில் ஆலய விழாவிற்கான கொடி ஏற்றத்தின் போது குடும்பங்களால் பரித்தியாகம் செய்யப்பட்ட கொடிகள் கொடிக் கயிற்றில் கட்டப்பட்டு பங்கு மக்கள் அனைவரதும் ஒற்றுமையையும், அவர்கள் ஒன்றுபட்டுச் செய்யும் திருவிழா என்பதையும் அடையாளமாகக் காட்டுகின்றது.

## செயற்பாடு

- வகுப்பைச் சிறு குழுக்களாகக் கலந்துரையாடலில் ஈடுபடுத்தவும்.

- கொடிமரம் ஏற்றுவது பங்குமக்களின் ஆன்மீகத்தை வளர்க்கும் சடங்கு என்பதை கலந்துரையாடுக.

- போட்டி பொறாமையை விடுத்து ஒன்றுபட்டு அனைவரும் எவ்வாறு செயற்படலாம் என்பதை ஆராய்க.


## திருவிழா ஆயத்தங்கள் :-

- வருடாந்தம் ஆலயத் திருவிழாவின் போது பங்குக் குரு அல்லது அவர் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட குருக்கள் அல்லது அருட் சகோதரர்கள் வீடுகளைத் தரிசித்துப் பங்குமக்களின் ஆன்மீக தேவைகளைப் பற்றி ஆராய்வர். குழுக்களாகப், பெற்றோர், இளைஞர்கள், பிள்ளைகள், மறை ஆசிரியர்கள் என அவரவர் தேவைக்கேற்பக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்து நடாத்தப்படும்.

- கொடிமரம் ஏற்றிய நாள் முதல் தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவநாள் நடைபெறும் (சில இடங்களில் நடைமுறைக் காரணங்களுக்காக 9/5/3 நாட்கள் எனவும் இடம்பெறலாம்). நவநாட்களின் போது செபமாலை செபிக்கப்பட்டுப் புனிதரின் அல்லது புனிதையின் வாழ்க்கைச் சரிதையை வெளிப்படுத்தி அதன்மூலம் எமக்கும் வரம் வேண்டும் பிரார்த்தனையும் செபிக்கப்படும். இறுதியில் நவநாளில் திரு வழிபாட்டுச் செயல்களின் உன்னத செயலான திருப்பலியும், மறை உரையும் இடம் பெறும்.

- நவநாட்கள் காலத்தில் இறைமக்கள் தகுதியான முறையில் திருவிழாவை நிறைவேற்ற, ஆன்மீக ஆயத்தமாக ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்படும். இதன் மூலம் பங்குமக்கள் அனைவரும் புதிய வாழ்வைப்பெற்று நிறைவான இறைமக்களாக வாழ அழைக்கப்படுகின்றனர்.

**பங்கு ஆலயப் பெருவிழாவின் போது வழங்கப்படும் ஆன்மீகச் செயற்பாடுகள்**



**செயற்பாடு :-**

- உங்கள் ஆலயத் திருவிழாவை நினைவுபடுத்துங்கள். அதன் மூலம் உங்கள் வாழ்க்கைக்குக் கிடைத்த நன்மைகள் எவை என்பதை நினைவுபடுத்துங்கள்.

## மாலை ஆராதனையும் திருவிழாத் திருப்பலியும்

- மாலை ஆராதனை அல்லது வெஸ்பர் திருவழிபாடு இறை மக்களை ஒன்றுகூட்டும் நிகழ்வு.
- திருச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திருப்புகழ்மாலைக்கு ஒரே மனதுடன் பங்குகொள்ளும் துறுவற, பொதுநிலையினர் நற்செய்தியையும், திருப்பாடலையும் பின்னணியாகக் கொண்டு நற்கருணை வழிபாட்டில் ஒன்றுபடுகின்றனர்.
- பங்குப் பெருவிழாவின் உச்சக்கட்டம் திருவிழாத் திருப்பலியாகும்.
- திருப்பலியில் பங்கு மக்கள் எல்லோரும் ஒன்றிணைகின்றோம். நற்கருணைத் திருவிருந்தில் பங்குபற்றுவதால் பங்கு மக்கள் எல்லோரும் ஒன்றாகக் கிறிஸ்துவின் மறை உடலில் உறுப்பினர்களாகின்றோம்.
- எமது ஆலயத்தின் பெயர் கொண்ட புனிதரின் பரிந்துரையினாலும் அவரது வேண்டுதலினாலும் நாம் பெற்றுக் கொண்ட வரங்களுக்காக மகிழ்ச்சியோடு இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்தி இறைமகிமையில் பங்குகொள்ளுகின்றோம்.
- திருப்பலியில் ஒன்றிணைந்த நாம், பங்குப் புனிதரின் பெருவிழாவை எமது இல்லங்களில் குடும்பமாக, உற்றார், உறவினர், நண்பர்களோடு கூடி எமது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## திருச்சுரூபப் பவனி





- ஆலயத் திருவிழாவில் முக்கியமான பகுதியாக திருச்சுரூபப் பவனி இடம் பெறுகின்றது. திருச் சுரூபப் பவனியானது, நாம் நமது பாதுகாவலரான புனிதரின் மூலமாகப் பெற்றுக்கொண்ட வரங்களுக்காக நன்றிப்பெருக்கோடு இறைவனையே மகிமைப்படுத்துகின்றோம் என்ற உணர்வை எம்மில் வளர்க்கின்றது.

- இச்சந்தர்ப்பமானது ஒருவரை ஒருவர் ஏற்று மதித்து நடக்கவும், ஒன்றித்துச் செயற்படவும் வாய்ப்பளிக்கும் ஒரு நிகழ்வாகும்.

- திருச்சுரூபப் பவனியானது பாடல்கள், செபங்கள், ஆர்ப்பரிப்புக்கள் மூலம் நாம் வாழும் சூழலில் ஒரே குடும்பமாக இறைவனுக்குச் சாட்சி பகரும் சந்தர்ப்பமாகும்.

- பங்குப் பெருவிழாவுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் வழியாக நீர் பெற்றுக்கொள்ளும் ஆன்மீக செயல்களை அட்டவணைப்படுத்துக.

| நிகழ்வு | ஆன்மீக செயற்பாடு |
|---|---|
| 1. கொடி மரம் ஏற்றுதல் | ஒற்றுமையின் அடையாளம்<br>திருவிழாவின் ஆரம்பம்<br>தியாகம் |
| 2. மாலை ஆராதனை (வெஸ்பர்) | |
| 3. மன்னிப்பு வழிபாடு | |
| 4. திருவிழாத் திருப்பலி | |
| 5. திருச்சுரூபப் பவனி | |

- வெளி ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உண்மையான ஆன்மீகத் தாகம் கொண்டவர்களாய் கிறிஸ்தவ வாழ்விற்குத் தேவையான நீதி, சகோதரத்துவம், அன்பு, இரக்கம் போன்ற விழுமியங்களை வளர்க்கும் பொருட்டு எமது திருவிழாக் காலங்களில் வழிபாடுகளையும், பிறசெயற்பாடுகளையும் ஒழுங்குபடுத்துகின்றோம்.

உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன்: உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை. எரிபலிகளையும் தானியப் படையல்களையும் எனக்கு நீங்கள் செலுத்தினாலும் நான் ஏற்க மாட்டேன்: கொழுத்த விலங்குகளை நல்லுறவுப் பலிகளாகச் செலுத்தும்போது நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன். என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள், உங்கள் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன். மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!

ஆமோஸ் 5:21-24

எசாயா 1:11-19 திருவிவிலியப் பகுதியை வாசித்து திருவிழாக்கள் பற்றி இறைவன் விரும்புபவை எவை, விரும்பாதவை எவை எனப் பட்டியல்படுத்துங்கள்.

| விரும்புபவை | விரும்பாதவை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

## சிந்தனைக்கு :-

- பங்கு ஆலயத் திருவிழா பங்கு மக்களுக்கு ஆசீர்வாதமாகும்.
- இறை மக்களின் ஆன்மீக வாழ்வை வளர்ப்பதன் மூலம் தம்மைப்பற்றிய நல்லெண்ணத்தையும், சுய கௌரவத்தையும் அளிக்கின்றது.
- மனித மாண்பு பேணப்படுவதன் மூலம் மனித நேயம் கட்டியெழுப்பப்படுகின்றது.
- மக்களிடையே சகோதரத்துவமும் நல்லெண்ணமும் ஏற்பட்டு ஒரே கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் உண்டு மகிழும் சமூகமாக மாறுகின்றோம்.
- இவ்வாறான செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி கிறிஸ்தவ வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்லும் கருவியாக பங்கு ஆலயத்திருவிழா அமைகின்றது.


இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

1. உமது பங்கின் பாதுகாவலரான புனிதரைப் பற்றிய வரலாறு அடங்கிய விபரங்களைத் தேடி எழுதுக.
2. அப் புனிதரின் வாழ்விலிருந்து நீர் பெறக் கூடிய முன்மாதிரிகைகளைப் பட்டியற்படுத்துக.
3. உங்கள் பங்கு ஆலயப் பாதுகாவலரின் கீதம் எழுதிப் பாடுக.

**வாழ்க்கைக்கு**

பாடலுடன் இறைவனைப் புகழ்வோம்.
வீணையுடன் இறைவனுக்கு இசை மீட்டுவோம்.
திருவிழாக்களில் இறை அருள் பெறுவோம்.